# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

தரம் - 2

இரண்டாம் தவணை

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பாடத்திட்டம்

**2022**

முன் பிள்ளைப்பருவ பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக்கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுப்படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிரார்த்திப்போம்.

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| சுற்றாடலைத் துருலியாராய்ந்து தகவல்களைக் கண்டறிந்து கூறுவார். | 06. நாம் காணும் வானம் | • வானத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.<br>• சூரிய ஒளி, காற்று, மழை ஆகியன காரணமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்துக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, வானம் மற்றும் சுற்றுப்புற சூழல் மாற்றங்களை வெளிக்காட்டும் ஆக்கங்கள் புரிவார்.<br>• வானத்தின் அழகை வெளிபாட்டு ஊடகங்களின் மூலம் முன் வைத்துக் களிப்புறுவார். | • நாளின் வெவவேறு சந்தர்ப்பங்க ளில் சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களை அவதானித்து வெளிப்படுத்துவார்.<br>• அதிக சூரிய ஒளி காரணமாக உடலில் ஏற்படும் பாதகமான நிலைமைகளில் இருந்து உடலைப் பாதுகாத்துக் கொள்ள ஆவன செய்வார்.<br>• அதிக சூரிய ஒளி காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான அனுபவங்களை விவரிப்பார்.<br>• வெவ்வேறு ஊடகங்களைப பயன்படுத்தி கண்களின் பாதுகாப்புக்காகச் செய்யக்கூடிய ஆக்கங்களைச் செய்வார்.<br>• வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வான்பொருள்களின் மாதிரியுருக்கள் ஆக்குவார். | 01-06 | 167-171 | 05 மணி |

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| உணவு உண்ணும் போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.<br><br>தாம் இருக்குமிடத்தின் சுத்தத்தையும் ஒழுங்கையும் பற்றி கரிசனையுடன் கருமமாற்றுவார். | 07. நாம் உண்பவையும் குடிப்பவையும் | • உணவு வகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.<br><br>• ஆரோக்கிய வாழ்வுக்காக சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பேணிவருவார்.<br><br>• உணவு அசுத்தமடையும் (மாசடையும்) விதங்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவன செய்வார்.<br><br>• பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உணவு தொடர்பான படைப்பாக்கங்களில் ஈடுபடுவார்.<br><br>• சக்தி விருத்திக்குத் துணையாகும் அசைவு இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • அன்றாடம் தமது உணவு வேளையில் அடங்கியுள்ள கீரை வகைகளை விருப்புடன் நுகர்வார்.<br><br>• அன்றாட நுகர்வுக்காகப் போசாக்கான உணவுகளை சேகரித்துக்கொள்ள ஆவன செய்வார்.<br><br>• நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பேணிவருவார்.<br><br>• உணவு வீண் விரயத்தைத் தவிர்க்கப் பங்களிப்புச் செய்வார்.<br><br>• உடலின் சக்தியை வளர்த்துக் கொள்வதற்குத் துணையாகும் அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br><br>• உணவு தொடர்பாகக் கூறும் பாடல் வரிகளை இசைப்பார். | 01-07<br><br>09 | 173-177<br><br>178 | 09 மணி |

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 08. தகவல் கிடைக்கும் வழிகள் | • தொடர்பாடலில் பயன்படும் வெவ்வேறு ஊடகங்களை இனங் கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.<br>• தொடர்பாடலுடன் இணைந்த தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்<br>• தொடர்பாடலின்போது மரியாதையாக நடந்து கொள்வார்.<br>• வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு எதிர்வினை காட்டியவாறு அசைவு/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • தகவல்களைச் சரியாகப் பெறும் மற்றும் வழங்கும் திறன்களை வெளிப்படுத்துவார்.<br>• தகவல் பெறுவதற்கும் தகவல் வழங்குவதற்கும் பயன்படுத்தும் வெவ்வேறு தொழினுட்பச் சாதனங்களைச் சரியாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.<br>• குரலையும் மெய்ந்நிலைகளையும்/ அங்க அசைவுகளையும் பொருத்தமானவாறு பயன்படுத்தி கருத்துக்களையும் உணர்வு களையுசும் சரியாக வெளிப்படுத்துவார்.<br>• தகவல் பெறும் போதும் தகவல் வழங்கும் போதும் மரியாதையாக நடந்து கொள்வார்.<br>• சமிக்ஞைகளுக்கு அமைவாகத் துலங்கியவாறு அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | 01-03<br><br>05<br><br>07 | 181-182<br><br>183<br><br>185 | 06 மணி |

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 09. சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள் | • சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களையும் அவை தொடர்பாக பிராணிகள் காட்டும் எதிர்வினைகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• சூழலில் நிகழும் மாற்றங்கள் மற்றும் அம்மாற்றங்களுக்கு பிராணிகள் காட்டும் எதிர்வினைகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• சுற்றுப்புறச் சூழலில் பாதகமான மாற்றங்களைச் சாதகமான மாற்றங்களாக மாற்றிக் கொள்வார். | • மழை, காற்று காரணமாக சூழலில் நிகழும் மாற்றங்கள் சிலவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.<br>• மழை, காற்று காரணமாக சூழலில் நிகழும் பாதகமான மாற்றங்கள் சிலவற்றை இனங்கண்டு கூறுவார்.<br>• மழை, காற்று காரணமாகச் சுற்றுபுறச் சூழலில் நிகழும் பாதகமான விளைவுகளை இழிவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.<br>• காற்றினால் இயக்கத்தக்க உபகரணங்களை ஆக்கிப் பயன்படுத்துவர்.<br>• காற்றைத் துணையாகக்கொண்டு, நாதமெழுப்பத்தக்க உபகரணங் களை ஆக்கிப் பயன்படுத்துவார். | 01-03<br><br>05-06<br><br>08-09 | 187-189<br><br>189-190<br><br>191-192 | 06 மணி |

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| பொருள்களையும் கருவிகளையும் கவனத்துடன் கையாள்வார். | 10. எமது நல்வாழ்வு | • நன்கு ஒழுங்கமைந்து செயற்படுவதன் மூலம் தமது கருமங்களை வெற்றிகரமாக நிறை வெற்றிக் கொள்வார்.<br>• நற்பண்புகளை மதித்து அக்குணாதிசயங்களைப் பேணிவர ஆவன செய்வார்.<br>• பொறுப்புக்களை நிறைவேற்றியவாறு பொதுக் கருமங்களில் பங்களிப்புச் செய்வார்.<br>• நல்வாழ்க்கைக்குரிய சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்ட திட்டங்களை மதித்து நடந்து கொள்வார்.<br>• உடல், உள தகைமையைப் பேணிவருவதற்குத் துணையாகும் ஆக்கங்களில் ஈடுபடுவார்<br>• நற்பழக்கங்களைப் பேணிவரத் துணையாகும் வகையிலான ஆக்கங்கள் புரிவார். | • பாடசாலையில் தமது அன்றாடக் கருமங்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் பேணிவருவார்.<br>• வகுப்பறையிலும் பாடசாலையிலும் ஒப்படைக்கப்படும் வேலைகளை கூட்டாகச் செய்வதில் பங்களிப்பார்.<br>• பாடசாலைக் கருமங்களில் நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார்.<br>• வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது தமது தருணம் வரும் வரை இருப்பார்.<br>• பாடசாலைப் பொதுச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவார்.<br>• நற்பழக்கங்கள் வெளிக்காட்டப்படும் பாடல்கள், கவிதைகளைத் திரட்டிப் பாடுவார். | 01-05 | 194-197 | 06 மணி |

தரம் 2 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 11. எமக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள் | • தேவைப்படும் சந்தர்ப்பங் களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>• வியாபார நிலையமொன்றின் தன்மையையும் தொழிற்பாட்டையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்/ பதிவு செய்வார்.<br>• தமக்குக் கிடைத்தவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் தன்மையைப் பேணிவருவார்.<br>• எமக்குத் தேவைப்படும் சிலவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.<br>• அன்றாடம் தேவைப்படுபவற்றை பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி ஆக்குவார். | • நாளாந்தம் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவி புரிவோர் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>• வியாபார நிலையத்தில் தாம் செயற்பட வேண்டிய பிதத்தை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• வகுப்பறைக் கருமங்களின் போது தமக்குரித்தானவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை வெளிக் காட்டுவார்.<br>• அன்றாடம் தேவைப்படுபவை சிலவற்றைத் தாமே ஆக்கிக் கொள்வார்.<br>• தையல் வேலை தொடர்பான அடிப்படைப் பரிச்சயத்தைப் பெறுவார். | 01-03<br><br>05 | 200-202<br><br>203 | **07** மணி |

மொத்த மணித்தியாலங்கள் 39 மணித்தியாலங்கள்